Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Tamilnadu Association For The Rights of All Types of Differently Abled and Caregivers - TARATDAC
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | செவ்வாய்க்கிழமை, ஆகஸ்ட் 27, 2024 | இதழ் 136

# கடல் கடந்து சென்றாலும் கவனமெல்லாம் தமிழ்நாட்டில்தான்!

## நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கு,

# உங்களில் ஒருவன்

சென்னை, 27 ஆகஸ்ட் 2024: பறவையைப் போல சிறகுகள் முளைக்கவில்லையே என்று மனித இனம் எதிர்பார்ப்பது உண்டு. அத்தகைய மனித இனத்திற்கு சிறகுகள் போல முளைத்தன அறிவியலின் அற்புதக் கண்டுபிடிப்புகளில் ஒன்றான விமானம் என்கிற வானூர்தி. கடல் கடந்து பயணிக்கும் பறவைகள் போல, மனிதகுலம் பல நாடுகளுக்கும் பறக்கத் தொடங்கியது. தனிப்பட்ட மகிழ்ச்சிக்கான பயணங்கள் உண்டு. வேலை தேடி பல நாடுகளுக்கும் பறப்பவர்கள் உண்டு. அலுவல் சார்ந்த சந்திப்புகளுக்கான பயணங்கள் உண்டு. அன்னை நிலம் பயன் பெறுவதற்கான பயணங்களில் ஒன்றாக, உங்களில் ஒருவனான நான் அமெரிக்காவுக்குப் பயணிக்கிறேன்.

முந்தைய ஆட்சிக்காலத்தில் தேங்கிக் கிடந்த தொழில்வளர்ச்சியை மீட்டெடுத்து, அதற்கேற்ற வகையில் முதலீடுகளை ஈர்த்து, புதிய தொழிற்கட்டமைப்புகள் வாயிலாக, மாநிலத்தில் பரவலான அளவில் தரமான வேலைவாய்ப்புகளை உருவாக்கி, தமிழ்நாட்டைப் பொருளாதார ரீதியாக முன்னேற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் என்கிற பொருளாதார இலக்கை நமது திராவிட மாடல் அரசு நிர்ணயித்து, அதற்கான பணிகளை முனைப்பாகவும் சிறப்பாகவும் மேற்கொண்டு வருகிறது. அந்த முனைப்பின் தொடர்ச்சியாகத்தான் இன்று (ஆகஸ்ட் 27) தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற முறையில் உங்களில் ஒருவனான நான் அமெரிக்காவுக்குப் பயணிக்கிறேன்.

திராவிட மாடல் ஆட்சி அமைந்ததிலிருந்தே தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கேற்ற கொள்கை வகுக்கப்பட்டு, பல்வேறு துறைகள் சார்ந்த முதலீடுகளைக் கொண்டு வந்தபடியே இருக்கிறோம். தேடி வருகின்ற முதலீடுகளைப் போலவே, தேடிச் சென்று முதலீடுகளை ஈர்க்கும் பணியையும், இன்றைய உலகளாவிய பொருளாதாரச் சூழலில் உள்ள போட்டிகளைக் கருத்திற் கொண்டு செயலாற்றி வருகிறது நமது அரசு.




தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, ஐக்கிய அரபு அமீரகம், சிங்கப்பூர், ஜப்பான், ஸ்பெயின் ஆகிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு நம் மாநிலத்திற்கான முதலீடுகளை ஈர்க்கும் புதிய தொழிற்சாலைகளை உருவாக்கும் வகையில் புகழும் தரமும் மிக்க பன்னாட்டு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன. 2024 ஜனவரி மாதம் சென்னையில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் பன்னாட்டு நிறுவனங்கள் பலவும் பங்கேற்று, புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டதன் வாயிலாகக் கடந்த மூன்றாண்டுகளில் ஏறத்தாழ 10 இலட்சம் கோடி ரூபாய்க்கான முதலீடுகளைத் தமிழ்நாடு ஈர்த்துள்ளது. இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் செயல்படுத்துகிற வகையில், ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொண்டு, அவற்றை முறையாகக் கண்காணித்து, தொழிற்சாலைகளைத் தொடங்கி, வேலைவாய்ப்பு அமைக்கும் பணியையும் திராவிட மாடல் அரசு மேற்கொண்டு வருகிறது.

சொன்னதைச் செய்வோம் என்று நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர் உருவாக்கித் தந்த ஆட்சி நிர்வாக இலக்கணத்தின்படி, தொழிற்சாலைகள் அமைப்பதற்கேற்ற சூழல்களை உருவாக்கிக் கொடுத்து, உடனடியாக அடிக்கல் நாட்டு விழாக்களையும், அதன் தொடர்ச்சியாக விரைவாக தொழிற்சாலைத் தொடக்க விழாக்களையும் மேற்கொண்டு வருகிறது திராவிட மாடல் அரசு. கடந்த 21-8-2024 அன்று சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு முதலீட்டாளர் மாநாட்டில் மட்டும ரூபாய் 17,616 கோடி மதிப்பிலான 19 நிறைவடைந்த திட்டங்கள் தொடங்கி வைக்கப்பட்டதுடன், ரூபாய் 51,157 கோடி மதிப்பிலான 28 திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டு, 1 இலட்சத்து 6 ஆயிரத்து 803 வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. புகழ்பெற்ற பன்னாட்டு நிறுவனமான வின்ஃபாஸ்ட் மின்வாகன நிறுவனம் தனது தொழிற்சாலைக்கான அடிக்கல் நாட்டுவிழாவை ஏற்கனவே என் தலைமையில் தூத்துக்குடியில் நடத்தி, பணிகளை விரைவுபடுத்தியுள்ளது. திராவிட மாடல் அரசின் தொடர்ச்சியான முயற்சிகளால் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலும் கடந்த 3 ஆண்டுகளில் நேரடியாகவும் மறைமுகமாகவும் 31 இலட்சம் பேருக்கான வேலைவாய்ப்புகள் உருவாக்கித் தரப்பட்டுள்ளன.

புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்துகொண்ட பன்னாட்டு நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதில் முனைப்பாக செயல்படுவதுடன், மேலும் பல நிறுவனங்களும் தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதில் ஆர்வம் காட்டும் வகையில், முதலீட்டாளர்களின் முதல் முகவரி தமிழ்நாடு என்ற அழுத்தமான அடையாளத்தைத் திராவிட மாடல் அரசு வெற்றிகரமாக உருவாக்கியுள்ளது. ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் என்ற பொருளாதார இலக்குடனான பயணத்தில் மற்றொரு கட்டம்தான், உங்களில் ஒருவனான நான் மேற்கொள்ளும் இந்த அமெரிக்கப் பயணம்.

ஆகஸ்ட் 29 அன்று சான்பிரான்சிஸ்கோவில் நடைபெறும் முதலீட்டாளர் சந்திப்பில் பங்கேற்று உரை நிகழ்த்துவதுடன், ஆகஸ்ட் 31 அன்று புலம்பெயர்ந்த தமிழர்களைச் சந்தித்து பேசுகிறேன். அதன்பின், செப்டம்பர் 2-ஆம் தேதி சான்பிரான்சிஸ்கோவிலிருந்து சிகாகோ செல்கிறேன். 10 நாட்களுக்கு அமெரிக்காவில் உள்ள முக்கிய நிறுவன முதலீட்டாளர்களை சந்தித்து, தமிழ்நாட்டில் முதலீடு செய்து, தொழில் தொடங்கிட அழைப்பு விடுக்கிறேன். “ஃபார்ச்சூன் 500” நிறுவனத்தின் தலைமை நிர்வாகிகளை சந்தித்து உரையாடவிருக்கிறேன். இவையனைத்தும் அன்னைத் தமிழ்நாடு தொழில்வளம் பெறவும், தமிழர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திடவுமான முயற்சிகளாகும். தொழில்முதலீடு சார்ந்த பயணம் என்றாலும், அமெரிக்காவாழ் தமிழர்களுக்கென்று தனியாக நேரத்தை ஒதுக்கித்தராமல் இருக்க முடியுமா? செப்டம்பர் 7-ஆம் நாள் சிகாகோவில் தமிழர்களுடனான மாபெரும் சந்திப்பு நிகழவிருக்கிறது.

1971-ஆம் ஆண்டு நம் உயிர்நிகர் தலைவர் - தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சிகாகோ பல்கலைக்கழகத்தின் அரசியல் மண்டபத்தில் அரிய உரை நிகழ்த்தி அனைவரின் கவனத்தையும் ஈர்த்தார். அவருடைய மனசாட்சியான திரு.முரசொலி மாறனும் அந்தப் பயணத்தில் உடன் சென்றிருந்தார். அன்றைய சிகாகோ வாழ் தமிழர்களும் அருகில் உள்ள மாநிலங்களைச் சேர்ந்த அமெரிக்க வாழ் தமிழர்களும் தலைவர் கலைஞரின் உரை கேட்டு மகிழ்ந்தனர். அதன்பின், நியூயார்க் நகருக்குச் சென்று அங்கு தமிழ் மன்றத்தைத் தொடங்கி வைத்தார் முத்தமிழறிஞர் கலைஞர்.

அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நினைவுகளுடன், ஏறத்தாழ 43 ஆண்டுகளுக்குப் பிறகு, தமிழ்நாட்டின் முதலமைச்சர் அதுவும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் உங்களில் ஒருவனான நான் அமெரிக்கா வாழ் தமிழர்களைச் சந்திப்பது எனக்கும் அவர்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சி தரும் நிகழ்ச்சியாக அமையும் என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டிருக்கிறேன். அமெரிக்கப் பயணத் திட்டங்களை ஒருங்கிணைப்பதற்காக மாண்புமிகு தொழில்-முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் தம்பி டி.ஆர்.பி.ராஜா முன்கூட்டியே அங்குச் சென்று ஏற்பாடுகளை கவனித்து வருகிறார்.

ஆகஸ்ட் 27 தொடங்கி செப்டம்பர் 14 வரையிலான இந்தப் பயண நாட்களின் நோக்கம், தமிழ்நாட்டின் தொழில்வளர்ச்சி அடுத்து வரும் பல தலைமுறைகளுக்குப் பயன் தருவதாக இருக்கவேண்டும் என்பதுதான். இந்தக் குறுகிய இடைவெளியில், தமிழ்நாடு அரசின் நிர்வாகப் பணிகள் தொய்வின்றித் தொடரவும், மக்கள் நலன் சார்ந்து திராவிட மாடல் அரசு நிறைவேற்றி வரும் திட்டங்களின் பயன்கள் தொடர்ந்து கிடைத்திடவும் அமைச்சர்களும் அதிகாரிகளும் சிறப்பான முறையில் செயல்பட வேண்டும் என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறேன். கழகத்தின் மாநில அளவிலான பொறுப்பாளர்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளும் செப்டம்பர் 17-ஆம் நாள் நடைபெறவுள்ள கழகத்தின் பவளவிழா ஆண்டின் முப்பெரும் விழாவை எழுச்சியுடன் நடத்திடுவதற்கான பணிகளை இப்போதே தொடங்கியிருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

உங்களுடைய ஒருவனான என் ஒரு தோளில், ஆட்சித் தலைமைப் பொறுப்பைத் தமிழ்நாட்டு மக்கள் ஏற்றி வைத்திருக்கிறார்கள். மற்றொரு தோளில், கட்சித் தலைமைப் பொறுப்பை நம் உயிர்நிகர் தலைவர் கலைஞரின் உடன்பிறப்புகளான நீங்கள் ஏற்றி வைத்திருக்கிறீர்கள். அந்தப் பொறுப்புகளைச் சுமந்தபடியேதான் அமெரிக்காவுக்குப் பறக்கிறேன்.

முதலமைச்சர் அயல்நாடு சென்றிருந்தாலும், தமிழ்நாட்டில் எந்தவொரு பணியும் தடைபடாமல் நடைபெறுகிறது என்று மக்கள் தரும் சான்றிதழே திராவிட மாடல் அரசுக்குப் பெருமை சேர்ப்பதாகும். அந்தச் சான்றிதழை மாண்புமிகு அமைச்சர்களும், மதிப்பிற்குரிய கழக நிர்வாகிகளும் பெற்றுத் தருவீர்கள் என்ற நம்பிக்கையுடன்தான் பொறுப்பை உங்களிடம் பகிர்ந்து செல்கிறேன். அமைச்சரவைக் கூட்டத்திலும் மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்திலும் ஏற்கெனவே இதனை வலியுறுத்தியிருக்கிறேன். ஆட்சிப் பணியும், கழகப் பணியும் தொய்வின்றித் தொடர்வதற்கு ஏற்ற வகையில் ஒருங்கிணைப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றுடன் ஒருங்கிணைந்து ஒவ்வொருவரும் தங்கள் கடமையினை கண்ணியத்துடன் நிறைவேற்ற வேண்டும். கட்டுப்பாடு காக்கின்ற வகையில், செயலில் வேகம் - சொற்களில் கவனம் என்பதை மனதில் நிறுத்தி செயலாற்றுங்கள்.

நம் மீது விமர்சனம் செய்ய விரும்புவோர், விவாதம் நடத்துவோர் ஆகியோருக்கு ஆட்சியிலும் கட்சியிலும் நாம் நிறைவேற்றும் பயனுள்ள செயல்களே பதில்களாக அமையட்டும். வார்த்தைகளால் பதில் சொல்லி அவர்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கும் வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டியதில்லை. தலைவர் கலைஞரின் உடன்பிறப்புகளான உங்கள் மீது உங்களில் ஒருவனான எனக்கு நிறைந்த நம்பிக்கை உண்டு. அந்த நம்பிக்கை செயல்வடிவமாக மாறுவதை ஒவ்வொரு நாளும் தொடர்பு கொண்டு விசாரிப்பேன். பணிகளைக் கண்காணிப்பேன். உடன்பிறப்புகளிடம் என் உணர்வுகளைக் கடிதம் வாயிலாகவும் காணொலிகளாகவும் பகிர்ந்து கொள்வேன். அமெரிக்காவில் இருந்தாலும் தாய்வீடான தமிழ்நாடு பற்றியேதான் என் மனது சிந்திக்கும். பார்வை கண்காணிக்கும்.

தமிழ்நாடு சிறக்க அயல்நாட்டுக்குச் சிறகு விரிக்கிறேன். உங்கள் வாழ்த்துகளுடன் பறக்கிறேன். அன்புடன் மு.க.ஸ்டாலின்.




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி



## நடுக்கடலில் நாகை மீனவர்களை தாக்கி ரூ. 5 லட்சம் வலை, என்ஜின் கொள்ளை: இலங்கை மீனவர்கள் அட்டூழியம்



சென்னை, 27 ஆகஸ்ட் 2024: நடுக்கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த நாகை மீனவர்கள் மீது இலங்கை மீனவர்கள் கத்தி முனையில் தாக்குதல் நடத்தி ரூ.5 லட்சம் ரூபாய் மதிப்புள்ள என்ஜின் மற்றும் மீன்பிடி வலைகளை கொள்ளையடித்துச் சென்ற சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நாகை மாவட்டம் செருதூர் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து அதே ஊரைச் சேர்ந்த தங்கதுரை என்பவருக்கு சொந்தமான ஃபைபர் படகில் தங்கதுரை, அவரது மகன் மணிகண்டன் மற்றும் கங்காதரன் ஆகிய மூன்று மீனவர்கள் நேற்று (திங்கள்கிழமை) கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றனர்.

இவர்கள் கோடியக்கரை அருகே வலை விரித்து கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது மூன்று அதிவேக படகுகளில் அங்கு வந்த 10 இலங்கை மீனவர்கள், நாகை மீனவர்களின் படகை சுற்றி வளைத்தனர். பின்னர் கத்தி, ரப்பர் தடியுடன் படகில் ஏறிய இலங்கை மீனவர்கள், நாகை மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தினர்.

அத்துடன் படகில் இருந்த சுசுகி இன்ஜின், 500 கிலோ வலை, வாக்கி டாக்கி, ஜிபிஎஸ் கருவி, செல்போன், மீனவரின் இடுப்பில் இருந்த வெள்ளி அரைஞாண் கயிறு என ரூ.5 லட்சம் மதிப்புள்ள பொருட்களை கொள்ளையடித்துக் கொண்டு அங்கிருந்து தப்பிச் சென்றனர்.

இந்தச் சம்பவத்தில் செருதூர் மீனவர்கள் மூவருக்கும் கை கால்களில் வெட்டு காயங்களும், உடலில் ஊமைக்காயங்களும் ஏற்பட்டன.

இதையடுத்து படகில் இருந்த மற்றொரு இன்ஜினை இயக்கி பாதிக்கப்பட்ட செருதூர் மீனவர்கள் இன்று (செவ்வாய்க்கிழமை) காலை கரை வந்து சேர்ந்தனர். பின்னர் பாதிக்கப்பட்ட மீனவர்கள் 108 ஆம்புலன்ஸ் மூலம் நாகை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டனர். தமிழக மீனவர்களை தாக்கி அவர்களிடம் இருந்து ரூ.5 லட்சம் மதிப்புள்ள என்ஜின் மற்றும் வலைகளை இலங்கை மீனவர்கள் கொள்ளையடித்துச் சென்ற சம்பவம் குறித்து பாதிக்கப்பட்ட செருதூர் மீனவர்கள் நாகை மீனவளத்துறை அதிகாரிகள் மற்றும் கடலோர பாதுகாப்பு குழும போலீஸாரிடம் புகார் அளித்துள்ளனர்.

நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த ராமேஸ்வரம் மீனவர்கள் 8 பேரை இலங்கை கடற்படையில் கைது செய்த சம்பவத்தை தொடர்ந்து நாகை மீனவர்கள் மீது இலங்கை மீனவர்கள் தாக்குதல் நடத்திய சம்பவம் ராமேஸ்வரம் மற்றும் நாகை மீனவர்கள் மட்டுமல்லாமல் தமிழக மீனவர்கள் இடையே பெரும் அதிர்ச்சியையும், அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

## 309-வது பிறந்த நாள் நெற்கட்டும்செவலில் பூலித்தேவன் சிலைக்கு 1-ந்தேதி அ.தி.மு.க. நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை - எடப்பாடி



சென்னை, 27 ஆகஸ்ட் 2024: மாமன்னர் பூலித்தேவனின் 309-வது பிறந்த நாளையொட்டி தென்காசி மாவட்டம், நெற்கட்டும்செவலில் உள்ள அவரது திருஉருவச் சிலைக்கு செப்டம்பர் 1 ந்தேதி அண்ணா தி.மு.க. சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்துவார்கள் என்று எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

இது குறித்து தலைமைக் கழகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

இந்திய விடுதலை வரலாற்றில் ‘வெள்ளையனே வெளியேறு’ என்று சுதந்திரத்திற்காக முதன்முதலில் முழக்கமிட்ட போராட்ட மாவீரரும், வீர உணர்ச்சியும், இறை உணர்வும் மிகுந்தவருமான மாமன்னர் பூலித்தேவனின் 309-வது பிறந்த நாளான 1.9.2024 ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு, ‘தென்காசி வடக்கு மாவட்டம், வாசுதேவநல்லூர் தொகுதி, நெற்கட்டும்செவல்’ என்ற இடத்தில் அமைந்துள்ள மாமன்னர் பூலித்தேவனின் திருஉருவச் சிலைக்கு, அண்ணா தி.மு.க.வின் சார்பில் முன்னாள் அமைச்சர்கள் திண்டுக்கல் சீனிவாசன், நத்தம் இரா. விசுவநாதன், என். தளவாய்சுந்தரம், செல்லூர் கே. ராஜூ, கடம்பூர் சி. ராஜூ, ஆர்.பி. உதயகுமார், கே.டி. ராஜேந்திரபாலாஜி, இசக்கி சுப்பையா, ஜி.பாஸ்கரன், சி.த. செல்லப்பாண்டியன், எஸ்.பி.சண்முகநாதன், வி.எம். ராஜலெட்சுமி, அமைப்புச் செயலாளர்கள் வி. கருப்பசாமி பாண்டியன், விவி. ராஜன் செல்லப்பா, சுதா கே. பரமசிவன், ஆர்.முருகையாபாண்டியன், என். சின்னத்துரை, பி.ஜி. ராஜேந்திரன், ஏ.கே. சீனிவாசன், வழக்கறிஞர் பிரிவுச் செயலாளர் ஐ.எஸ். இன்பதுரை, கொள்கை பரப்பு துணைச் செயலாளர் பாப்புலர் வி. முத்தையா, திருநெல்வேலி மாநகர் மாவட்ட செயலாளர் தச்சை என்.கணேசராஜா, தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் சி.கிருஷ்ணமுரளி, தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்துவார்கள்.

திருநெல்வேலி மாவட்ட செயலாளர் தச்சை என். கணேசராஜா, தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் சி. கிருஷ்ணமுரளி, தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் எஸ்.செல்வமோகன்தாஸ் பாண்டியன், ஆகியோர் இணைந்து, இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மிகச் சிறப்பான முறையில் செய்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாமன்னர் பூலித்தேவனுக்கு மரியாதை செலுத்தும் இந்நிகழ்ச்சியில், தென்காசி வடக்கு, தென்காசி தெற்கு, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில், பல்வேறு நிலைகளில் பணியாற்றி வரும் நிர்வாகிகளும், கழக உடன்பிறப்புகளும் பெருந்திரளான அளவில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

## சென்னையில் பார்முலா 4 கார் பந்தயம் நடத்துவதற்கு எதிராக ஐகோர்ட்டில் பா.ஜ.க. நிர்வாகி வழக்கு: நாளை விசாரணை



சென்னை, 27 ஆகஸ்ட் 2024: சென்னையில் பார்முலா 4 கார் பந்தயம் நடத்துவதற்கு எதிராக சென்னை ஐகோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணை நாளை நடைபெறுகிறது.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் தனியார் அமைப்பு இணைந்து சென்னையில் பார்முலா 4 கார் பந்தயம் நடத்த முடிவு செய்யப்பட்டது. கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற இருந்த நிலையில், மிக்ஜாம் புயல் காரணமாக கார் பந்தயம் ஒத்திவைக்கப்பட்டது. வரும் 31 மற்றும் செப்டம்பர் 1-ம் தேதிகளில் சென்னை தீவுத்திடலைச் சுற்றி 3.5 கிலோமீட்டர் தூரத்துக்கு பார்முலா 4 கார் பந்தயம் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. பந்தயத்திற்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. மின்விளக்குகள் பொருத்துவது, போட்டியை 8,000 பேர் கண்டு ரசிக்க இருக்கைகள், பாதுகாப்பு தடுப்பு வேலிகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், பார்முலா-4 கார் பந்தயத்தை சென்னையில் நடத்துவதை எதிர்த்து ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு பா.ஜ.க. செய்தித் தொடர்பாளர் பி.என்.எஸ்.பிரசாத் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். இன்று பிற்பகலில் அவசர வழக்காக விசாரிக்க வேண்டும் என்று மனுதாரர் தரப்பில் கோரிக்கை வைக்கப்பட்ட நிலையில், நாளை விசாரிப்பதாக நீதிபதிகள் கூறினர்.

## திருப்பூரில் பயங்கர சத்தத்துடன் நிலஅதிர்வு: பொதுமக்கள் பீதி



சென்னை, 27 ஆகஸ்ட் 2024: திருப்பூர் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் நேற்று பலத்த சத்தத்துடன் பல்வேறு இடங்களில் நில அதிர்வு ஏற்பட்டது. இதனால் பொதுமக்கள் பீதி அடைந்தனர்.

திருப்பூர் நாச்சிபாளையம் பகுதியில் செயல்பட்டு வரும் டிபார்ட்மெண்ட் ஸ்டோரில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராவில் இந்த நில அதிர்வு பதிவானது. அதில் நில அதிர்வு ஏற்பட்டபோது கடையின் ஷட்டர், தகரம் சீட்டுகள் குலுங்கிய காட்சிகள் பதிவாகியுள்ளன.

திருப்பூர் காங்கேயம் சாலை நாச்சிபாளையம் பகுதியில் சுமார் 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். குறிப்பாக நேற்று மாலை நில அதிர்வு உணரப்பட்டபோது பல்வேறு வீடுகளில் பொருட்கள் நகர்ந்துள்ளது. இதனால் அப்பகுதி மக்கள் பீதியில் இருந்தனர். இச்சம்பவம் தொடர்பாக சமூக வலைதளங்களில் பல்வேறு பதிவுகளை பதிவிட்டு வருகின்றனர்.

அதில் தங்களது பகுதியில் பலத்த சத்தத்துடன் ஏற்பட்ட நில அதிர்வு, இயற்கையாகவே ஏற்பட்ட நில அதிர்வா? இல்லை கல்குவாரியில் பாறைகளை பெயர்ப்பதற்காக வைக்கப்பட்ட வெடிச்சத்தமா? என பல்வேறு கேள்விகளை எழுப்பி பதிவிட்டு வருகின்றனர்.

இதேபோல் திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் நேற்று மாலை ஊரே குலுங்கும் வகையில் அதி பயங்கர வெடி சத்தம் கேட்டது. இந்த சத்தமானது சுமார் 70 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள 80-க்கும் மேற்பட்ட கிராமங்களில் உணர முடிந்ததாக பொது மக்கள் தெரிவித்தனர். அப்போது வீடுகளில் இருந்த பொருட்கள், பீரோ ஆகியவை நகர்ந்ததாக தெரிவித்தனர்.

இந்த வெடி சத்தமானது வானில் விண்கற்கள் ஒன்றுடன் ஒன்று மோதிகொண்டதால் ஏற்பட்ட சத்தமா? அல்லது தாராபுரம் அருகே புகளூர் பவர் கிரிட் நிறுவனத்தில் அதிக சக்தி கொண்ட மின் டிரான்ஸ்பார்மர்களில் மின் அழுத்தத்தால் ஏற்பட்ட சத்தமாக இருக்குமா? அல்லது நில அதிர்வு காரணமா? என ஒருவருக்கு ஒருவர் செல்போன் மூலம் விசாரித்தனர்.

இது குறித்து தாராபுரம் காவல் துறை, வருவாய் துறை சார்பில் முறையான விளக்கம் பொது மக்களுக்கு அளிக்கப்படவில்லை என கூறப்படுகிறது.

பயங்கர சத்தம் கேட்டதும் தாராபுரம் நகர் குடியிருப்பு பகுதியில் இருந்த பொது மக்கள் வீட்டை விட்டு அலறி அடித்தபடி வெளியே ஓடி வந்தனர். தாராபுரம், மூலனூர், குண்டடம் மற்றும் அதனை சுற்றியுள்ள 80க்கும் மேற்பட்ட நகர் மற்றும் கிராம பகுதிகளில் பதற்றம் ஏற்பட்டது. இரவு முழுவதும் பொதுமக்கள் பலர் தூங்காமல் தவித்தனர்.

இது குறித்து வருவாய்த்துறை அதிகாரிகள் கூறுகையில், திருப்பூர் மாநகர் மற்றும் தாராபுரம், காங்கயம் உள்ளிட்ட பகுதியில் ஏற்பட்ட பயங்கர சத்தம் குறித்து ஆய்வு செய்து வருகிறோம். சூலூர் விமான படை தளத்தில் இருந்து பறக்கும் போர் விமானங்களால் அவ்வப்போது பயங்கர சத்தம் கேட்டது. நேற்று ஏற்பட்ட சத்தம் போர் விமானங்களால் ஏற்படவில்லை.

எனவே அது குறித்து இன்று ஆய்வு செய்கிறோம். நில அதிர்வு ஏற்பட்டதா என்பது குறித்து ஆய்வு செய்யப்படுகிறது.

திருப்பூர் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் ஏற்பட்ட சத்தத்திற்கு பிறகு ஒரு மணி நேரத்தில் அசாம் மாநிலத்தில் நில அதிர்வு ஏற்பட்டுள்ளது. அது ரிக்டர் அளவுகோலில் 2 ஆக பதிவாகி உள்ளது. எனவே நில அதிர்வு ஏற்பட்டதா? என்பது குறித்து ஆய்வு செய்யப்படும் என்றனர்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# கே எஃப் சி அதன் 'ஓப்பன் கிச்சன்ஸ்' முன்முயற்சியுடன் நுகர்வோரை தங்கள் சமையலறைகளுக்குள் அழைத்துச் செல்கிறது




சென்னை, 27 ஆகஸ்ட் 2024: மிருதுவான. மொறுமொறுப்பானது . ஃபிங்கர் லிக்கிங் குட். நம்பத்தக்க சுவையுடன் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தவும், உணவுப் பாதுகாப்பு மற்றும் தரத்தில் தனது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தவும் கே எஃப் சி சமீபத்தில் சென்னையில் ஒரு பிரத்யேக 'ஓப்பன் கிச்சன் டூரை' ஏற்பாடு செய்தது. பல ஆண்டுகளாக, கே எஃப் சி ஐ வரையறுக்கும் உன்னிப்பான செயல்முறைகள் மற்றும் கடுமையான சுகாதாரத் தரங்களை திரைக்குப் பின்னால் பார்க்க, இந்த ஓப்பன் கிச்சன் டூர்களை பிராண்ட் நடத்தி வருகிறது.

கே எஃப் சி இரண்டு தசாப்தங்களாக இந்தியாவில் உள்ள கோழி பிரியர்களை அவர்களது விருப்பத்திற்குத் தகுதியான உணவு மூலம் மகிழ்வித்து வருகிறது. கே எஃப் சி இந்தியாவின் மெனு, பிரபலமான ஹாட் & கிரிஸ்பி பக்கெட், ஜிங்கர் பர்கர் மற்றும் பாப்கார்ன் சிக்கன் போன்ற உலகளாவிய விருப்பமான தயாரிப்புகளின் வலுவான கலவையாகும், அத்துடன் கே எஃப் சி சிஸ்ஸா, ரைஸ் பவுல்ஸ், வெஜ் மற்றும் தந்தூரி போன்ற உள்ளூர் சுவைகளில் வேரூன்றிய புதுமையான வரையறுக்கப்பட்ட நேர சலுகைகளையும் வழங்குகிறது. கே எஃப் சி இந்தியாவின் புதிய அறிமுகமான தாய் ஸ்பைசி, கொரியன் டேங்கி, அமெரிக்கன் நாஷ்வில்லி, இந்தியன் தந்தூரி மற்றும் இந்தியன் ஸ்பைசி வெஜ் போன்ற பல்வேறு ரோல்களையும் உள்ளடக்கியுள்ளது.

இந்த மாயாஜாலங்கள் நிகழும் கே எஃப் சியின் சமையலறைகளில், அவற்றின் உலகப் புகழ்பெற்ற சுவையானது எப்போதும் உங்கள் நம்பிக்கைக்குரியதாகும். ஒவ்வொரு நாளும், திறமையான சமையல்காரர்கள், வெளியில் மிருதுவாகவும், உள்ளே ஜுசியாகவும் இருக்கும் கோழியை புதிதாகத் தயாரிக்க, கடுமையான, பலபடிச் செயல்முறையைப் பின்பற்றுகிறார்கள்.

ஓப்பன் கிச்சன் டூர் கே எஃப் சி ரசிகர்களுக்கு சமையலறைக்குள் ஒரு உள் பார்வையை அனுமதிக்கிறது, குழுவைச் சந்திக்கும் வாய்ப்பை வழங்குகிறது மற்றும் உயர்தர பொருட்கள் எவ்வாறு புதிதாக தயாரிக்கப்பட்ட ஃபிங்கர் லிக்கிங் நல்ல உணவாக மாற்றப்படுகின்றன என்பதை நேரடியாகக் காணும் வாய்ப்பை வழங்குகிறது.

கே எஃப் சியின் பிரத்தியேகமான மிருதுவான சிக்கனை உருவாக்குவது மிகச்சிறந்த பொருட்களுடன் தொடங்குகிறது மற்றும் பிரெஷ் சிக்கன் இந்த செயல்முறையின் மையத்தில் உள்ளது. இந்தியாவில், கே எஃப் சி ஆனது சர்வதேச பாதுகாப்புத் தரங்களைச் சந்திக்கும் உயர்தர உள்ளூர் சப்ளையர்களிடமிருந்து 100% உண்மையான முழு தசைக் கோழியை வாங்குகிறது, மேலும் இது சப்ளையர்களின் பண்ணைகள் முதல் நுகர்வோரின் தட்டுகள் வரை 34 கடுமையான சோதனைகளுக்கு உட்படுகிறது.

சிறப்பு உபகரணங்களைப் பயன்படுத்தி கோழியை மேரினேட் செய்தல், ரொட்டி செய்தல் மற்றும் வறுத்தல் பற்றிய விரிவான செயல்முறையை இந்த டூர் கோடிட்டுக் காட்டியது. கோழியைத் தயாரிப்பதில் ஒரு குறிப்பிட்ட முறை உள்ளது, அதில் ஒவ்வொரு கோழித் துண்டையும் கையால் ரொட்டி செய்து ஏழு முறை ராக்கிங் செய்து குறைந்தபட்சம் 170 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் சமைத்து, அந்த சரியான கே எஃப் சி சுவையை அடையலாம். கே எஃப் சி சிக்கன் புதிதாக கடையில் தயாரிக்கப்படுகிறது, இது எப்போதும் சூடாகவும் புதியதாகவும் வழங்கப்படுவதை உறுதி செய்கிறது.

கே எஃப் சி சர்வதேச சமையல் தரங்களைப் பின்பற்றுகிறது, எஃப் எஸ் எஸ் ஏ ஐ-அங்கீகரிக்கப்பட்ட பொருட்களைப் பயன்படுத்துகிறது மற்றும் எஃப் எஸ் எஸ் ஏ ஐ வழிகாட்டுதல்கள் அடிப்படையிலான செயல்முறைகளைப் பின்பற்றுகிறது. அனைத்து உணவுப் பொருட்களும் காலாவதியாகும் காலக்கெடுவைக் கொண்டுள்ளன, மேலும் அவை நிர்ணயிக்கப்பட்ட நுகர்வு நேரத்தைக் கடந்ததும் நொடியில் அலமாரியில் இருந்து வெளியேற்றப்படும். ஒவ்வொரு கே எஃப் சி உணவகமும் கண்டிப்பான சுத்தம் மற்றும் துப்புரவுத் திட்டத்தைப் பின்பற்றுகிறது, இதில் அனைத்து உணவு தொடர்பு பரப்புகளையும் கழுவி-அலசி-சுத்திகரிக்கும் செயல்முறையும் அடங்கும்.

அனைத்து சைவ மற்றும் அசைவ வழங்குதல்களும் தனித்தனியாக தயாரிக்கப்படுகின்றன - எண்ணெய், பாத்திரங்கள் மற்றும் பொருட்கள் அனைத்தும் தனித்தனியாகப் பராமரிக்கப்படுகின்றன. சைவப் பிரிவில் பணிபுரிபவர்கள் உடன் அசைவப் பிரிவில் உள்ளவர்களின் சிவப்பு நிறத்திற்கு மாற்றாக பச்சை நிற கவசத்தை அணிவார்கள். ஓப்பன் கிச்சன்ஸ் டூர் முன்முயற்சியானது கே எஃப் சி இன் வெளிப்படைத்தன்மை, தரம் மற்றும் உணவுப் பாதுகாப்பின் மிக உயர்ந்த தரங்கள் மீதான அதன் அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துகிறது. இந்தியாவில் அதன் முதல் உணவகத்திலிருந்து, கே எஃப் சி நாட்டில் ஆழமாக இணைந்துள்ளது மற்றும் உள்ளடக்கிய, சமமான மற்றும் நிலையான வணிக நடைமுறைகள் மூலம் ஃபிங்கர் லிக்கிங் நல்ல உணவை வழங்குவதில் உறுதியாக உள்ளது. இந்த பிராண்ட் தற்போது இந்தியா முழுவதும் 240+ நகரங்களில் 1100+ உணவகங்களை இயக்குகிறது.

# அப்போலோ குழந்தைகள் மருத்துவமனையின் முன்னோடித்துவமிக்க அறுவைசிகிச்சை அல்லாத ஃபோன்டன் மருத்துவ நடைமுறை, குழந்தைகளுக்கான இதய சிகிச்சையில் மாபெரும் புரட்சியை ஏற்படுத்தியிருக்கிறது!

சென்னை, 27 ஆகஸ்ட் 2024: அப்போலோ குழந்தைகள் நல மருத்துவமனை அறுவை சிகிச்சை இல்லாமல் மேற்கொள்ளும் ஃபோன்டன் மருத்துவ நடைமுறையை வெற்றிகரமாக செய்திருப்பதன் மூலம் குழந்தைகளுக்கான இருதய சிகிச்சையில் ஒரு புதிய மைல்கல் சாதனையைப் படைத்திருக்கிறது. இதய நோய் துறையின் தலைவர் டாக்டர் நெவில்லே ஏ ஜி சாலமன் மற்றும் இன்டர்வென்ஷனல் கார்டியாலஜி பிரிவின் தலைவர் டாக்டர் சி.எஸ். முத்துகுமரன் தலைமையிலான மருத்துவ குழு இந்த சாதனையை படைத்திருக்கிறது. இந்த மருத்துவ நடைமுறை, குழந்தைகளுக்கு இருக்கும் சிக்கலான இதய பிரச்சினைகளுக்கு சிகிச்சையளிப்பதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை பிரதிபலிக்கும் வகையில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.




6,500-க்கும் மேற்பட்ட திறந்த இதய அறுவை சிகிச்சைகள் மற்றும் 10,133 குறைந்தபட்ச ஊடுருவும் மருத்துவ நடைமுறைகளை வெற்றிகரமாக மேற்கொண்டிருக்கும் சாதனையுடன், அப்போலோ குழந்தைகள் நல மருத்துவமனை குழந்தைகளுக்கான இதய பராமரிப்பில் முன்னணி வகிக்கிறது.

அப்போலோ மருத்துவமனையின் இன்டர்வென்ஷனல் கார்டியாலஜி பிரிவைச் சேர்ந்த, டாக்டர். முத்துக்குமரனின் வழிகாட்டுதலின் கீழ், 1.2 கிலோ எடையுள்ள குழந்தைகளுக்கு டக்டல் ஸ்டென்டிங் மற்றும் வெறும் 4 கிலோ எடையுள்ள குழந்தைகளுக்கு விஎஸ்டி டிவைஸ் க்ளோஸ்சர் போன்ற மேம்பட்ட நடைமுறைகளுக்கான இந்தியாவின் மிகப்பெரிய மையமாக அப்போலோ மருத்துவமனை மாறியுள்ளது.

அப்போலோ குழந்தைகள் நல மருத்துவமனையின் குழந்தை இருதய அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் நெவில்லே ஏ ஜி சாலமன் கூறுகையில், "அப்போலோ குழந்தைகள் மருத்துவமனையில் மேற்கொள்ளப்படும் இதய பராமரிப்பு தொடர்பான முழுமையான அணுகுமுறையில், அறுவை சிகிச்சை மற்றும் குறைந்தபட்ச ஊடுருவும் சிகிச்சை நிபுணத்துவத்தை இணைத்து சிக்கலான இதய நிலைகளைக் கொண்ட குழந்தைகளுக்கு உகந்த சிகிச்சை அளிக்கப்படுகிறது. அறுவைசிகிச்சை அல்லாத ஃபோன்டன் மருத்துவ நடைமுறையானது புதுமையான, நோயாளியை மையமாகக் கொண்ட பராமரிப்பு மற்றும் புதுமையான சிகிச்சையை வழங்கவேண்டுமென நாங்கள் கொண்டிருக்கும் உறுதிப்பாட்டை பிரதிபலிப்பதாக அமைந்திருக்கிறது.

அப்போலோ குழந்தைகள் நல மருத்துவமனையின் குழந்தைகள் இருதயநோய் நிபுணர் டாக்டர். சி.எஸ். முத்துக்குமரன் கூறுகையில், "சிங்கிள் வென்ட்ரிக்கிள் இதய குறைபாடுகள் உள்ள குழந்தைகளுக்கு, இந்த நவீன ஃபோன்டன் மருத்துவ நடைமுறை உயிர் காக்கும் வாய்ப்பினை வழங்குகிறது. மேலும் நோயாளிகள் இப்போது 2-3 நாட்களுக்குள் மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் செய்யப்படுவார்கள், இதனால் அவர்கள் குணமடையும் காலம் வெகுவாக குறைந்திருக்கிறது. இந்த நடைமுறையின் வெற்றி எங்கள் மருத்துவர்கள் குழுவின் மகத்தான அர்ப்பணிப்பு மற்றும் துல்லியமான திட்டமிடலுக்கு மிகப்பெரும் சான்றாகும். இதுவரையில் 12 அறுவைசிகிச்சை அல்லாத ஃபோன்டான் மருத்துவ நடைமுறைகளை 100% வெற்றிகரமாக முடித்துள்ளோம், மேலும் சிகிச்சைக்குப் பிறகான பராமரிப்பானது 2 ஆண்டுகள் தொடரும் நீண்ட காலம் தொடர்ந்து கண்காணிப்படுகிறது" என்றார்.

சென்னை அப்போலோ குழந்தைகள் நல மருத்துவமனை தனது அதிநவீன தொழில்நுட்பம் மற்றும் நிபுணத்துவமிக்க மருத்துவ நிபுணர்கள் குழு என இரண்டும் இணைந்த மிகச் சரியான அணுகுமுறையின் மூலம் மூலம் குழந்தைகளுக்கான இதய பராமரிப்பை தொடர்ந்து மேம்படுத்தி வருகிறது. அறுவைசிகிச்சை அல்லாத ஃபோன்டன் மருத்துவ நடைமுறையை வெற்றிகரமாக செயல்படுத்துவது, உலகெங்கிலும் உள்ள குழந்தைகளுக்கான இதய பராமரிப்பில் ஒரு புதிய அத்தியாயத்தைக் குறிப்பிடுவதாக அமைந்திருக்கிறது.

# ராமேஸ்வரம் மீனவர்கள் 8 பேரை கைது செய்த இலங்கை கடற்படை... 8 மாதங்களில் 341 பேர் சிறையில் அடைப்பு



சென்னை, 27 ஆகஸ்ட் 2024: ராமேஸ்வரம் மீனவர்கள் 8 பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்தனர்.

தமிழக மீனவர்களின் ஒரு விசைப்படகை சிறைப்பிடித்து அதிலிருந்த 8 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்தனர். கடந்த ஜனவரி மாதத்திலிருந்து தற்போது வரை 341 தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

ராமநாதபுரம் மாவட்டம் மன்னார் வளைகுடா மற்றும் பாக் ஜலசந்தி கடற்பகுதியில் சூறைக் காற்று வீசியதால் கடந்த ஒரு வார காலமாக ராமேசுவரம் மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை. இந்நிலையல் நேற்று வானிலை இயல்பு நிலைக்கு திரும்பிதைத் தொடர்ந்து ராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து சுமார் 450 விசைப்படகுகளில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் கடலுக்குச் சென்றனர். இன்று அதிகாலை மரியசியா என்பவருக்குச் சொந்தமான விசைப்படகில் கிங்சன் (40), மெக்கன்ஸ் (37), ராஜ் (43), இன்னாசி ராஜா (45), சசி (40), மாரியப்பன் (45 ), அடிமை (33), முனியராஜ் ( 23) ஆகிய எட்டு பேர் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது, எல்லை தாண்டியதாக குற்றஞ்சாட்டி ரோந்தில் இருந்த இலங்கை கடற்படையினர் அவர்களைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் தலைமன்னார் கடற்படை முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அவர்கள் இன்று பிற்பகல் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு வவுனியா சிறையில் அடைக்கப்படுவார்கள் என தெரிகிறது. கடந்த ஜனவரி மாதத்திலிருந்து தற்போது வரை 46 தமிழக மீனவர்களின் படகுகளை சிறைப்பிடித்து 341 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## சமுன்னதி எஃப் பி ஓ மாநாட்டின் நான்காவது பதிப்பு நிலைத்தன்மை மற்றும் புதுமைகளில் கவனம் செலுத்துகிறது




சென்னை, 27 ஆகஸ்ட் 2024: சமுன்னதி, சென்னையை தளமாகக் கொண்ட ஒரு நிறுவனமான அதன் வரவிருக்கும் இரண்டு நாள் மாநாட்டை 2024 செப்டம்பர் 3 மற்றும் 4 ஆம் தேதிகளில் ஹைதராபாத்தில் அறிவிப்பதில் பெருமிதம் கொள்கிறது. இந்த ஆண்டு நிகழ்வானது "நிலைத்தன்மை" என்ற கருப்பொருளில் கவனம் செலுத்துகிறது மற்றும் 500+ எஃப் பி ஓக்கள் மற்றும் 700+ பங்கேற்பாளர்களை அக்ரி எம் எஸ் எம் ஈகள், வேளாண் கார்ப்பரேட்டுகள், வேளாண்மை பல்கலைக்கழகங்கள் மற்றும் நாடு முழுவதிலும் உள்ள ஆராய்ச்சி நிறுவனங்களில் இருந்து, நிலையான விவசாய நடைமுறைகளை இயக்க உறுதிபூண்டுள்ளது. நீண்ட காலமாக எஃப் பி ஓக்கள் மற்றும் சிறு விவசாயிகளுக்கு அதிகாரம் அளிப்பதில் முன்னணியில் இருந்து வருகிறது, மேலும் இந்த மாநாடு நிலையான விவசாயத்தில் இந்தியாவின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் ஒரு முக்கிய நிகழ்வாக இருக்கும் என்று உறுதியளிக்கிறது. இந்த நிகழ்விற்கு பிளாட்டினம் ஸ்பான்சர்களாக தொடர்புடைய ஓலம் அக்ரி போன்ற விவசாயத் துறை தலைவர்களிடமிருந்து எஃப் பி ஓ மாநாட்டிற்கு ஆதரவு கிடைத்தது.

மத்திய மற்றும் மாநில அரசுகளின் முக்கிய பிரதிநிதிகள், நபார்டு அதிகாரிகள், வேளாண் தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் விவசாயத் துறையில் முன்னணி ஆராய்ச்சியாளர்கள் கலந்துகொள்வார்கள். தொடர்ச்சியான பட்டறைகள், குழு விவாதங்கள் மற்றும் ஊடாடும் அமர்வுகள் மூலம், பங்கேற்பாளர்கள் நிலையான விவசாயம், சந்தைகளுக்கான அணுகல் மற்றும் விவசாய செயல்திறனை மேம்படுத்துவதில் தொழில்நுட்பத்தின் பங்கு ஆகியவற்றின் சமீபத்திய போக்குகளை ஆராய்வார்கள்.

இந்த நிகழ்வு இந்தியாவின் விவசாய நிலப்பரப்புக்கு ஒரு முக்கியமான நேரத்தில் வருகிறது. சமீபத்திய ஆண்டுகளில், வழக்கமான மற்றும் நிலையான விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்களை எதிர்கொள்வதில் முக்கிய கருவியாக எஃப் பி ஓ களின் முக்கியத்துவத்தை அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது. மேலும் இந்த நிறுவனங்களுக்கு ஆதரவளிப்பதற்கான நிதி உறுதிப்பாட்டிற்காகவும் அது வாதிட்டுள்ளது.

சமுன்னதியின் தலைமை நிர்வாக அதிகாரியாக, திரு. அனில் குமார் எஸ்.ஜி கூறுகையில், "சந்தைகளுக்கான அணுகல் ஒரு முக்கியமான பிரச்சினையாகவே உள்ளது, ஆனால் எஃப் பி ஓ கள் இந்த சவாலுக்கு இன்றியமையாத தீர்வை வழங்குகின்றன. நிலையான விவசாய முறைகளுக்கான வளர்ந்து வரும் தேவையை பூர்த்தி செய்ய இந்த அமைப்புகளை வலுப்படுத்துவதற்கான முயற்சிகளை நாங்கள் தொடர்ந்து மேற்கொள்வது முக்கியம்.

சமுன்னதி எஃப்பிஓ கான்க்ளேவ் 2024 இந்தியாவில் நிலையான விவசாயத்திற்கான முன்னோக்கிச் செல்லும் சாலை வரைபடத்தை பட்டியலிடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. கொள்கை வகுப்பாளர்கள், நிதி நிறுவனங்கள் மற்றும் வேளாண் தொழில்நுட்ப கண்டுபிடிப்பாளர்கள் உட்பட முக்கிய பங்குதாரர்களிடையே உரையாடலை வளர்ப்பதன் மூலம், இந்த நிகழ்வு ஒத்துழைப்பு மற்றும் புதுமைக்கான ஒரு முக்கியமான தளமாக இருக்கும். மாநாட்டில் பகிரப்படும் விவாதங்கள் மற்றும் நுண்ணறிவுகள், நிலையான விவசாய நடைமுறைகளுக்கு இந்தியா எவ்வாறு மாற்றத்தை அணுகுகிறது என்பதில் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## சத்யஜோதி ஃபிலிம்ஸ் டி.ஜி. தியாகராஜன் தயாரிப்பில் பாண்டிராஜ் இயக்கத்தில் மக்கள் செல்வன் விஜய் சேதுபதி, நித்யா மேனன் நடிக்கும் புதிய திரைப்படம்



சென்னை, 27 ஆகஸ்ட் 2024: பெருங்கடல்கள் மற்றும் சர்வதேச சுற்றுச்சூழல் மற்றும் அறிவியல் விவகாரங்களுக்கான அமெரிக்க வெளியுறவுத் துறை துணை அமைச்சர் (பொறுப்பு) ஜெனிஃபர் ஆர். லிட்டில்ஜான், அறிவியல், பசுமைத் தொழில்நுட்பம் மற்றும் பருவநிலை செயல்பாடுகள், தூதரின் நீர் நிபுணர்கள் திட்டத்தின் மூலம் நதி மறுசீரமைப்பு உள்ளிட்டவற்றில் அமெரிக்கா-இந்தியா கூட்டுச் செயல்பாடுகள் குறித்து உள்ளாட்சி தலைவர்கள், தொழில் மற்றும் கல்வி நிறுவனங்களுடன் ஆகஸ்ட் 22 மற்றும் 23 சென்னையில் உரையடினார்.

இது குறித்து பேசிய அவர், "பல்லுயிர்தன்மையை பாதுகாப்பதில் இருந்து பருவநிலை நெருக்கடியை எதிர்த்துப் போராடுவது வரை உலகின் மிகப்பெரிய சவால்களைத் எதிர்கொள்வதில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் அமெரிக்கா-இந்தியா ஒத்துழைப்பு முக்கியமானது. முக்கியமான மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுக்கான அமெரிக்கா□-இந்தியா முன்முயற்சியின் (ஐ சி ஈ டி) கீழ் நமது இருதரப்பு உறவின் முக்கிய அங்கமாகவும் இது விளங்குகிறது. இந்த ஒத்துழைப்பின் வலிமையை சென்னை நிரூபிக்கிறது! சூரிய மற்றும் பசுமை தொழில்நுட்பங்களில் புதிய கண்டுபிடிப்புகள் முதல் சென்னையை அதன் நீர்வழிகளை பசுமையாக்கும் இலக்கில் ஆதரிக்கும் தூதரின் நீர் நிபுணர்கள் திட்டம் (ஏ டபிள்யூ ஈ பி) வரை, நாம் ஒன்றிணைந்து வளமை மற்றும் மற்றும் வலிமை மிக்க எதிர்காலத்தை உருவாக்கலாம்," என்றார்.


ஸ்ரீபெரும்புதூரில் உள்ள அமெரிக்க சூரிய எரிசக்தி தொழில்நுட்ப நிறுவனமான ஃபர்ஸ்ட் சோலாரின் உற்பத்தி ஆலையைப் பார்வையிட்ட துணை அமைச்சர் லிட்டில்ஜான், சூரிய ஆற்றல் தொழில்நுட்பம் மற்றும் நிலைத்தன்மை நடைமுறைகள் குறித்து மூத்த அலுவலர்களுடன் உரையாடினார். சென்னை ஐஐடி ஆராய்ச்சி பூங்காவுக்கு சென்ற அவர், பசுமைத் தொழில்நுட்பம் மற்றும் விண்வெளி புத்தொழில்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட வசதிகளையும் பார்வையிட்டார். அமெரிக்க துணைத் தூதரகம் மற்றும் சென்னை ஐஐடி ஆராய்ச்சி பூங்கா இடையே திட்டமிடப்பட்டுள்ள பசுமைத் தொழில்நுட்பம் சார்ந்த புதிய சிந்தனைகள் மற்றும் சூழலியல்களை வளர்த்து ஊக்குவிப்பதற்கான கூட்டாண்மைக்கு முன்னதாக, சுற்றுச்சூழல் தீர்வுகளில் புதுமைகள் மற்றும் கூட்டு செயல்பாடுகளை வளர்ப்பதற்காக பசுமைத் தொழில்நுட்ப தொழில்முனைவோர்களுடன் வட்டமேசை கூட்டத்தில் பங்கேற்றார்.

பின்னர் அண்ணா பல்கலைக்கழகம் சென்ற துணை அமைச்சர் லிட்டில்ஜான், உள்ளூர் மீள்தன்மை உத்திகளை வலுப்படுத்த பருவநிலை மாதிரியைப் பயன்படுத்துவதில் கவனம் செலுத்துவது தொடர்பான கருத்தரங்கில் ஆசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் அறிஞர்களுடன் பங்கேற்றார்.

சென்னை மேயர் ஆர். பிரியாவை சந்தித்த துணை அமைச்சர் லிட்டில்ஜான் மற்றும் சென்னையில் உள்ள அமெரிக்க துணைத் தூதர் கிறிஸ் ஹாட்ஜஸ், பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் ஆறுகள், ஏரிகள் மற்றும் ஈரநிலங்கள் உள்ளிட்ட நன்னீர் சுற்றுச்சூழல் அமைப்புகளின் முக்கியத்துவம் குறித்து விவாதித்தனர். நகர்ப்புறத் திட்டமிடல் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் நிலையான நீர் மேலாண்மை முக்கியப் பங்கு வகிப்பதை இந்த சந்திப்பு வலியுறுத்தியது. சகோதரி நகரம் மற்றும் பிற கூட்டாண்மைகளைப் பயன்படுத்தி நதி மறுசீரமைப்புக்கான சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் நகரங்களை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ள தூதரின் நீர் நிபுணர்கள் திட்டத்தின் வாயிலாக சென்னையுடன் ஒத்துழைப்பதற்கான அமெரிக்காவின் உறுதிப்பாட்டை துணை அமைச்சர் லிட்டில்ஜான் லிட்டில்ஜான் வலியுறுத்தினார்.

நிலைத்தன்மை நடைமுறைகளை மேம்படுத்துவதற்கான கூட்டு முயற்சிகளை ஆராய்வதற்காக நதி மறுசீரமைப்பு மற்றும் சுற்றுச்சூழல் சமூக பிரதிநிதிகளையும், அமெரிக்க வெளியுறவுத் துறை பரிமாற்ற திட்டங்களின் முன்னாள் பயனாளிகளையும் துணை அமைச்சர் லிட்டில்ஜான் சென்னையில் சந்தித்தார்.

## ஆர்.எஸ்.மணிகண்டன் மற்றும் மகேஸ்வரன்கேசவன் தயாரிப்பில் மகேஸ்வரன்கேசவன் இயக்கத்தில் புகழ் நாயகனாக நடிக்கும் 'ஃபோர் சிக்னல்'




சென்னை, 27 ஆகஸ்ட் 2024: ஸ்ரீ லக்ஷ்மி சண்முகநாதம் ஃபிலிம்ஸ் மற்றும் கேசவ் புரொடக்ஷன்ஸ் பேனர்களில் ஆர்.எஸ்.மணிகண்டன் மற்றும் மகேஸ்வரன்கேசவன் இணைந்து தயாரிக்க மகேஸ்வரன்கேசவன் இயக்கத்தில் 'விஜய் டிவி' புகழ் கதையின் நாயகனாக அறிமுகம் ஆகும் 'ஃபோர் சிக்னல்' திரைப்படம் வெளியீட்டுக்கு தயாராகி வருகிறது.

அறிமுக இயக்குநரான மகேஸ்வரன்கேசவன், காதலும், உணர்வுகளும் கலந்த கலகலப்பான திரைப்படமாக 'ஃபோர் சிக்னல்' படத்தை உருவாக்கி உள்ளார். நகரங்களில் வசிக்கும் வெகு ஜனங்கள் வெகுவாக பயன்படுத்தும் எளிய போக்குவரத்தான ஷேர் ஆட்டோவை சுற்றி இந்த கதை சுழல்கிறது.

சென்னையின் ஒரு பகுதியில் இருந்து இன்னொரு பகுதிக்கு தினமும் ஷேர் ஆட்டோவில் செல்லும் பயணிகளுக்கும் அதன் ஓட்டுநருக்கும் இடையில் நடக்கும் சுவாரஸ்யமான சம்பவங்களின் தொகுப்பாக உருவாகியுள்ள 'ஃபோர் சிக்னல்' திரைப்படத்தை வரும் அக்டோபர் மாதம் தீபாவளிக்கு வெளியிட படக்குழு தயாராகி வருகிறது.

அருவி திருநாவுக்கரசு, கல்லூரி வினோத், லொள்ளு சபா சேஷு, ஷர்மிளா, விஜய் ஆதிராஜ், யூடியூபர் காத்து கருப்பு கலை உள்ளிட்ட பல பிரபலங்கள் நடிக்க, ஏ.ஜெ அலி மிர்சாக் இந்த திரைப்படத்திற்கு இசையமைத்துள்ளார்.

மனிதர்களின் அந்தரங்க உணர்வுகளையும் யதார்த்தங்களையும் உள்ளடக்கிய ரொமான்ஸ் டிராமாவாக உருவாகியுள்ள 'ஃபோர் சிக்னல்' திரைப்படத்திற்கு பாலா பழனியப்பன் ஒளிப்பதிவு செய்ய, பிரியன் எடிட்டிங் செய்துள்ளார்.

படம் குறித்து பேசிய இயக்குநர், "எளிய மக்களின் வாழ்க்கையில் நடக்கும் தினசரி நிகழ்வுகளின் சுவாரஸ்ய தொகுப்பாக 'ஃபோர் சிக்னல்' இருக்கும். தரமான திரைப்படங்களை எப்போதும் ஆதரிக்கும் தமிழ் ரசிகர்கள் இந்த திரைப்படத்தையும் ஆதரிப்பார்கள் என்று நான் முழுமையாக நம்புகிறேன்," என்றார்.



**பொன்ராம் இயக்கத்தில் முகேஷ் செல்லையா தயாரிப்பில் சரத்குமார்-சண்முகபாண்டியன் நடிக்கும் புதிய படத்தின் படகுழுவினர் விஜயகாந்த நினைவிடத்தில் நல்லாசி பெற்றனர்.**